# கோவிலின் அமைப்பும் விஞ்ஞான விளக்கமும்



**சுவாமி. பிரபாகரனானந்த சரஸ்வதி**

*அவர்களின் விரிவுரைகளில் இருந்து*



ஸதாசிவ சமாரம்பா
சங்கராச்சார்ய மத்யமா
ஹஸ்மத் ஆச்சாரிய பரியந்தாம்
வந்தே குருபரம்பராஹ

# கோவிலின் அமைப்பும் விஞ்ஞான விளக்கமும்

சுவாமி. பிரபாகரனானந்த சரஸ்வதி
அவர்களின் விரிவுரைகளில் இருந்து

25481

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்
இல. 03. றிஜ்வே இடம்,
கொழும்பு 04,
இலங்கை.

*Youth League for Sanadhana Dharmic Perception, 1999*

*Published and Distributed by :*

**Youth League for Sanadhana Dharmic Perception (YLSDP)**
No. 03, Ridgeway Place, Colombo 04, Sri Lanka

*E-mail : ylsdp@iname.com*
*URL : http://ylsdp.faithweb.com*

## முன்னுரை

உலகிலுள்ள சகல சீவராசிகளுள் உயர்நிலையுடையது மானுடப் பிறவியாகும். இவ்வுலகில் பிறக்கும் மானிடர் யாவரும் இறப்பது திண்ணம். ஆறறிவு படைத்த மானிடப் பிறப்பெய்தியோர் இறுதியில் வீடுபேறெய்தி இறைவனை அடைவதையே இந்து மதம் இலட்சியமாகக் கொள்கிறது. தம் வாழ்நாளின் இறுதிக் காலம் அண்மிக்கும் வரை மாயைகளினால் மறைக்கப்பட்டு வாழ்வு, நடத்தும் ஏராளமானோர் இவ் இலட்சியத்தை அறிந்து ஒழுகுவது குறைவு. சிறுபராயம் தொடக்கம் ஞான வழிகளில் ஈடுபடுவோரும் இடைக்காலத்தில் மகரிஷிகளின் அருளினால் ஈர்க்கப்பட்டு தம் வாழ்வை தவநெறியில் நின்று வாழ்ந்து தமது அடியார்களுக்கும் வழிகாட்டிய சமயகுரவர் / ஞானிகள் மிகச் சிலரேயாவர். எனவே சாதாரண இந்து மக்களை சமய நெறியில் ஈர்த்து ஈடுபாடு கொள்ளச் செய்யும் ஆரம்ப நிலையாக கடவுள் வழிபாட்டுத் தலங்கள் கோயில்கள் ஊர் தோறும்கட்டப்பட்டன, பெரும்பாலும் மூர்த்தி, தீர்த்தம் தலம் ஆகியவை பொருந்திய தெய்வீக சக்தி வாய்ந்த இக் கோயில்கள் மன்னராலும், கொடைவள்ளல்களினால் ஏன் பொதுமக்கள் கைங்கரியத்தினாலும் கட்டப்பட்டன. இவ்வாறாக இந்துக் கோயில்கள் ஆகமங்களில் கூறிய முறைக்கேற்ப சாஸ்திர முறையில் கட்டப்பட்டு சிலைகள் ஸ்தாபிக்கப்படுகின்றன. எனவே கோயிற் கட்டடம், கோபுரம், மூர்த்தங்கள் மற்றும் சிற்ப அமைப்பு சித்திர வேலைப்பாடுகள் தெய்வீக சாஸ்திர முறைகளை அடியொற்றி அமைக்கப்படுகின்றன. இவற்றை முறையாகத் தெரிந்து கொள்ளாத இந்துக்கள் இளையோர் முதல் முதியோர் வரை உள்ளோர் ஏராளம். இந்த அடிப்படை நோக்கத்தை மிக எளிதாக விஞ்ஞான ரீதியாக விளக்கும் சிறு கைநூல் இதுவாகும். சுவாமிகள் பிரபாகரனானந்த ஸரஸ்வதி அவர்களின் விரிவுரைகளிலிருந்து தொகுக்கப்பட்டு சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்தினரால் வெளியிடப்படும் இந்நூலைப் படிக்கும் இந்துக்கள், கோயிற் கட்டட அமைப்பின் உள்ளர்த்தத்தை நன்கு உணரக் கூடியதாக இருக்கும். கையடக்கமான இந்நூலை வாசிப்பதனால் இந்துக்களாகிய நாம் கோயிற்கலையின் குறிக்கோளையும்

முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளும் வாய்ப்புப் பெறுவதோடன்றி எம்மைப் பார்த்துப் பலவிதமான வினாக்களை எழும்பும் பிற சமயத்தவர்க்கும் விளக்கமாகப் பதில் கூறக் கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

கையடக்கமான இவ்விளக்க நூல் சகல இந்துக்கள் வீடுகளிலும் இருக்கத் தகுந்தது. இதனைப் படிப்பவர் யாவரும் பயன்பெறுவர் என்பதில் ஐயமில்லை. பிரபாகரனானந்த ஸரஸ்வதி சுவாமிகளின் இறைபணி மேலோங்கி இந்து மதம் விளக்கம் பெற முழுமுதற் கடவுளை வணங்கி வேண்டி நிற்கிறேன்.

*திருமதி.இ.கைலாசநாதன்*
ஓய்வு பெற்ற மேலதிகச் செயலாளர்
இந்து விவகார கலாசார சமய அலுவல்கள் அமைச்சு

## ஆசியுரை

**இந்தியாவில் பாலக்காடு என்னும் நகரில் அமைந்துள்ள திவ்ய ஜீவன சங்கத்தின் தலைவர் சுவாமி பிரபாகரானந்த சரஸ்வதி அவர்களது விரிவுரையிலிருந்து எழுதப்பட்டுள்ள 'கோயிலின் அமைப்பு விஞ்ஞான விளக்கம்' என்னும் இச்சிறுகைநூல், கோயிலின் அமைப்பு மற்றும் வழிபாட்டு முறைகளின் பின்னனியில் உள்ள உண்மைகளை விஞ்ஞான முறையில் விளக்குகின்றது.**

**பௌதிக விஞ்ஞானம் மிகவும் வளர்ந்து, மக்களது சிந்தனை களிலும், வாழ்க்கை வழிமுறைகளிலும் பெரிதும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய இன்றைய காலகட்டத்திலே, சமயதத்து வங்களையும், வழிபாட்டு முறைகளையும் கூட விஞ்ஞான ரீதியில் விளக்கினால், இன்றைய இளந் தலைமுறையினர் அவற்றை எளிதில் ஏற்றுக்கொள்வதோடு, பாராட்டவும் செய்வர் என்பதில் ஐயமில்லை.**

**எனவே இவ்வாக்கத்திற்கு இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும் என எதிர்பார்க்கலாம்.**

**சுவாமிஜி அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் சனாதனதர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்தினருக்கும் எங்கள் மனமார்ந்த பாராட்டுக்கள் உரித்தாகுக!**

சுவாமி ஆத்மகனானந்தா.
இராம கிருஷ்ண மிஷன்,
கொழும்பு.

## போஷகரிடமிருந்து ...

மனித வழிபாட்டிற்கு ஆகம விதிப்படி அமைத்த கோவிலே மையம். சைவாகமம் கோவில் வழிபாட்டையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. எமது நாயன்மார் எல்லோரும் கோவில் தொண்டிலும் கோவில் வழிபாட்டிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு தம்மையுணரும் பெருநிலை கண்டனர்.

பஞ்சபூதம், படைப்பு, பிரபஞ்ச ஆக்க இயக்கம், மனித ஆக்க இயக்கம், இவற்றை மையமாகக் கொண்டதே கோவில் அமைப்பும் வழிபாடும்.

படைப்புக்களின் ஆதார சக்கரங்கள் அவற்றோடு பிரபஞ்ச கோள்கள் கொண்டுள்ள தொடர்பையும் கோவில் அமைப்பு பிரதிபலிக்கும். பிரபஞ்சம் (Macrocosm) மனிதன் (Microcosm) என்ற உண்மையயை கோவில் காட்டி நிற்கும். குண்டலினீ பராசக்தி, பிரணவத்தண்டினூடாக (கொடிமரம்) படைப்பு களில் பாய்ந்து, பின் இட, வட கலை இயக்கமாக இயங்கும் நிலையும், மந்திர உச்சாடனம் மூலப் பிராணப்பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரஹங்கள் உயிர் அலை, உனர்வலையை வியாபித்து நிற்பதும் கோவிலிலே. மனிதனுக்கும் பிர பஞ்சத்திற்கும், இரண்டின் இயக்கத்திற்கும் உள்ள தொடர்பை ஆகம விதிப்படி இயற்றப்பட்ட கோவில்கள் தெளிவாக்கும். இதனால் லோகக்ஷேமம், மனித க்ஷேமம் பேணப்படுகின்றது. சுற்றாடல் மாசுபடல் (Environmental pollution), சமுதாயம் மாசுபடல் (Social Pollution) முதலியன ஆகம கோவில்களின் செயல்பாட்டால் தவிர்க்கப்படுகின்றது.

சுபம்

செல்வி. குமாரலக்ஷமி குமாரசிங்கம்
போஷகர்: சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்

## தலைவரிடமிருந்து...

இந்த அவசரயுகத்தில் பொருளாதாரச் சுமையாலும், மேலைத்தேய நாகரிகக் கலப்பாலவும் நாம் நமது தனித்துவத்தை இழந்து நிற்கின்றோம்.

முகவரி தொலைந்தாலும் பரவாயில்லை. ஆனால் இன்று முகமே தொலைந்து போனதே! இதற்கு யார் காரணம்? நாம் நாமே தான்.

அலையில் சிக்குண்ட சருகுகளாய் காலத்தின் ஓட்டத்தை எதிர்த்து நிற்கமுடியாமல், நலிந்தவர்களாய், வலிமை குன்றி யவர்களாய் இருக்கும் நாமே இதற்கும் காரணம்.

அவ்வாறாயின் எமக்கு வலிமை தரும் சக்தி எங்கே? அது நமக்குள்ளேயே இருக்கின்றது. நமக்குள் உறங்கிக்கிடக்கும் சக்தி எழுந்து கட்டளையிடும்போது கடவுள்களெல்லாம் கட்டுப்பட்டுக் கடமை செய்யக் காத்திருக்கிறார்கள். அவ்வாறாயின் அந்தச் சக்தியை எழுப்பும் வழிதான் என்ன?

சனாதன தர்மம். இது நடைமுறை வாழ்விற்கும் வழிகாட்டுகின்றது, மோக்சத்துக்கும் வழி பகர்கின்றது."நான் ஒரு ஹிந்து" என்பதில் ஒவ்வொருவரும் பெருமை கொள்ள வேண்டும்.

பொக்கிஷத்தை முதுகில் சுமந்தவாறு ஒற்றை ரூபாவிற்காய் கையேந்தும் யாசகனாய் ஒளியை ஒளித்து வைத்து விட்டு இருளில் மூழ்கியிருக்கும் எமது சமுதாயத்திற்கு நாம் ஒரு அகல் விளக்கை ஏந்தி வந்திருக்கின்றோம்.

எமது இந்த கன்னி முயற்சியின் வெற்றி உங்கள் பயிற்சியிலேயே தங்கியிருக்கிறது. கொழும்பு தமிழ்ச் சங்கம்

இரண்டு அம்ஸங்கள் இந்தப்புத்தகத்தில் இடம் பெறு கின்றன. முதலாவதான கோயில் விளக்கும் தத்துவங்களிலே இதுவரையில் நாம் விழிப்புணர்ச்சி அற்றிருந்த கோயிலமைப்பு, கோயிலிலே மேற்கொள்ளப்படும் கிரியைகள் சார்ந்த தத்துவ விளக்கங்கள், ஒவ்வொரு ஹிந்துவும் (சனாதன தர்மியும்) அறிந்து பின்பற்ற வேண்டிய ஆச்சாரங்கள் என்பன உள்ளடங்கியுள்ளன.

இரண்டாவது அம்ஸமான வேதம்~ஒரு சாரம் ஸனாதன தர்மத்தின் அடிப்படையாக விள்ங்கும் பதினெட்டு தத்து வங்களையும் பற்றிய அறிமுகமாக அமைந்திருக்கின்றது. இவற்றிலுள்ள தத்துவங்களை வாழ்க்கைப்படுத்திப் பயன்பெறுவீர்கள் என்பது எமது நம்பிக்கை.

இந்நூலை 'திருப்தியான வாழ்விற்கு கீதை காட்டும் பாதை' கருத்தரங்கு நாளான இன்று (16~05~99) உங்களுக்கு வழங்கக் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி கொள்கிறோம்.

இம் முயற்சிக்கு மூலவேராய் இருந்து எம்மை வழிநடத்திய எமது கழக ஆச்சாரியார் ஸ்வாமி H.H பிரபாகரானந்த ஸரஸ்வதி அவர்களின் பாதக் கமலத்தில் இதனைச் சமர்ப்பிக்கின்றோம்.

உங்களில் ஒருவனாய் இருக்கும்,

சனாதன தர்மி
**பழணியான்டிபிள்ளை சுந்தரேசன்**
தலைவர்

## செயலாளர்களிடமிருந்து ...

*மரம் கூட வினையென வீழ்ந்தால்*
*தளிரெனத் துளிர்க்கும்*
*மனிதர் நாமேன் புதைந்தே போகிறோம்?*

*கல்தோன்றி மண் தோன்றா காலத்திற்கு முன்*
*தோன்றிய மூத்த குடியாகிய நாம் எப்படி*
*சடப்பொருள் போலானோம்?*

*ஆதியும் அந்தமும் இல்லா சனாதன தர்மத்தைத்*
*தாக்கி நிறுத்தும் தூண்களாய் இருக்க வேண்டிய*
*நாம் ஏன் துவண்டு போனோம்?*

*கேள்விகள் இங்கே, விடைகள் எங்கே?*
*வேதம் சொல்லும்*
*வாருங்கள் மனதினைத் திறந்துவைப்போம்.*

*அறியாமையாலும், பொறுப்பற்ற தன்மையினாலும்*
*விழித்துக் கொண்ட தொலைந்த எமது*
*ஹிந்து தர்மத்தின் வேர்களை*
*நீங்களும் வாருங்கள் சேர்ந்தே தேடுவோம்.*

*சனாதன தர்மம் எனும் வானலாவும் கோபுரத்தைத்*
*தூர்ந்து போக விடலாமா? இல்லை*
*உயிரினும் மேலாய்க் காப்போம் என முழங்கி*
*முதற் கல்லினைக் கைகளில் எடுத்தோம்*
*வாருங்கள் சேர்ந்தே கட்டி முடிப்போம்.*

செயலாளர்கள்
**அனுசுயாதேவி இராஜ்மோகன்**
**வாகினி ஸ்ரீதரன்**

# கோவில்

கோவில் எனப்படுவது ஆத்மாக்களுக்கெல்லாம் அரசனாகிய பரமாத்மா (தேவன்) உறைகின்ற இல்லம் ஆகும்.

" த்யோதனாத் இதி தேவா " – ப்ரபஞ்சத்தைப் படைக்கின்ற சக்தி கொண்டவன் தேவன் என்பது இதன் பொருள்

"ஈஷா வாஸ்ய மிதம் சர்வம்" என்பதற்கமைய இறைவன் எல்லா இடத்தும் வியாபித்து இருக்கின்ற போதிலும் சிறப்பாக திருக்கோயிலில், உறைகிறான். பூமியினடியில் எங்கும் தண்ணீர் இருந்த போதிலும் கிணற்றின் மூலமாகவே நாம் அதனைப் பெறுகின்றோம். இதைபோல இறையருளை பெற நாம் ஆலயத்திற்குச் செல்ல வேண்டியது அவசியமாகிறது.

பறவைகள் கூடியிருக்கிற மரத்தினடியில் சென்று கைதட்டுகையில் அவை கலைவது போல இறைவன் சந்நிதியில் நின்று எம் உள்ளக்கதவுகளைத் தட்டித் திறக்கையில் பாவங்கள் பறந்தோடுகின்றன.

ஸாஸ்திரப் பிரகாரம் கோயில்கள் வழமையாக ஆற்றங்கரைகளிலும், மலையுச்சிகளிலும் மேலும் அமைதியும் சாந்தமும் நிலவும் இடங்களிலேயுமே அமைக்கப்பெறும்.

எந்த ஒரு ஆலயத்தினதும் ஆதிகால வரலாற்றை எடுத்துக் கொண்டால் அந்த இடத்தில் ஞானிகள், ரிஷிகள், முனிவர்கள் தியானம் செய்த, அல்லது அவர்களது சமாதி அமைந்த இடமாகவே காணப்படுவது வழக்கம். உடம்பானது அணுக்களால் ஆனது. இந்த ஞானிகளது நித்திய மந்திர உச்சாடனத்தின் மூலம் அவர்களது பூரண உடம்பும் மந்திரசக்தியினால் ஏற்றப்பட்டு, அனைத்து உயிர் ஜீவராசிகள் அனைத்தையும் கவரக்கூடிய தன்மை கொண்டு காணப்படும். இதனால் இவர்களது அதிர்வுகள் அந்த இடத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கும். இவை தூய்மையான சிந்தனையை ஏற்படுத்தக்கூடிய, மாற்றக்கூடிய தன்மையினை கொண்டிருப்பதனால் மக்களின் நடமாட்டம் அதிகரிக்கும் இவையே பின்பு ஒரு காலத்தில் ஆலயமாக மாறுகின்றன.



கோயில்கள் இந்து தர்மத்தின் அடிப்படையாக விளங்குகின்ற வேதங்களுடன் நேரடித் தொடர்புடைய ஆகம விதிகளின் அடிப்படையிலேயே அமைக்கப்படுகின்றன. இவை தூய உயர் சக்தி வாய்ந்த அதிர்வுகளைக் கடத்திக் கொண்டிருக்கும் மூர்த்தங்கள் என்பதையும் மனித மனங்களையும், சுற்றுப்புற சூழலையும் இவை தூய்மைப்படுத்துகின்றன என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மானுடத்தின் தொடர்ச்சிக்கு கோயில்கள் இன்றியமையாதவை.

ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் தனிப்பட்ட குறைந்த அதிர்வெண்களை உடைய அதிர்வுகள் உண்டு. இவ்வதிர்வானது அவனது உடல் உள தன்மையினால் உருவாக்கப்படுகிறது. இம்மனிதன் கோயிலுக்குச் செல்லும் போது கோயிலின் உயர் அதிர்வும் (Higher vibration) அவனது குறைந்த அதிர்வும் கலக்கின்றன. இதன் விளைவாக ஒரு தேறிய உயர் அதிர்வெண் (Resultant vibration) அவனைச் சூழ உருவாக்கப்படுகிறது. இது அவனது மன நிலையை தூய்மைபடுத்தி அம்மனிதனின் உடல், உள துன்பங்களை நீக்குகிறது. எனவே தான் கோயிலுக்கு எவர் சென்றாலும் அவர் பயன் பெறுவர். எவ்வாறாயினும் கோயிலுக்கு செல்லும் ஒவ்வொருவரது அதிர்வுகளும் கோயில்கள் அதிர்வுகளை சிறிதளவில் பாதிக்கின்றன. (அநுரன சித்தாந்தம்). இதன் காரணமாகவே கோயிலுக்குச் செல்லும் ஒவ்வொருவரும் கோயில் ஆசாரங்களை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். இல்லாவிடில் கோயில்கள் பாதிக்கப்பட்டு அதன் மூலம் சமுதாயமும் சீரழிந்துவிடும்.

கோயில்கள் தேவையற்ற எதிர்மறையான கதிர்களிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்ற காரணத்தினால் பக்தர்கள் நெருங்கிய உறவினரை இழந்து குறித்த சில நாட்கள் வரை அல்லது மகப்பேற்றுத் துடக்கு, மாதவிடாய் போன்ற நாட்களில் அனுமதிக்கப் படுவதில்லை.

கோயிலிலிருந்து பக்தனுக்கும் பக்தனிலிருந்து கோயிலுக்குமிடையிலான சக்தி மாற்றம் சித்தாந்த முறைப்படியே திகழ்கின்றது. இதுவே ஆகம விதிப்படி அமைக்கப்பட்டுள்ள கோயில்களுக்கும் ஏனையவற்றிற்கும் இடையிலான வேறுபாடாகும். கோயில்கள் நித்திய கருமங்களுடைய உயிர் பொருந்திய விக்ரஹங்களைக் கொண்டுள்ளதாகவும் ஏனையவை வெறும் பிரார்த்தனைக் கூடங்களாகவுமே அமைகின்றன.

**கோயில் அமைப்பு**

கோயிலினமைப்பை நாம் சற்றே நோக்கினால் அது ஒரு மனிதனின் உடலினை ஒத்ததாக பிரபஞ்சத்திற் காணப்படும் ஐம்பூதங்களாலேயே ஆக்கப்பட்டுள்ளது.

**ஒரு கோயிலில் அமைய வேண்டிய 196 பிரமாணங்களின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| தத்துவங்கள் | – | 96 |
| கலைகள் | – | 64 |
| மூலாதாரம் | – | 6 |
| துவாரங்கள் | – | 9 |
| பூதங்கள் | – | 5 |
| வேதங்கள் | – | 4 |
| சாஸ்திரங்கள் | – | 6 |
| குணங்கள் | – | 3 |
| ஜாதி | – | 2 |
| கடவுள் | – | 1 |


**ஆலயம் என்பது மனித உடம்பைப் போலவே அமைக்கப்பட்டிருக்கிறது என்பதன் விளக்கம்**

| உடலின் உறுப்பு | | உடம்பின் உறுப்புகளைப்போல அமைக்கப்பட்டுள்ள ஆலயத்தின் பாகம் |
|---|---|---|
| பாதங்கள் | ... | முன்கோபுரம் |
| முழங்கால் | ... | ஆஸ்தான மண்டபம் |
| துடை | ... | நிருத்த மண்டபம் |
| தொப்புள் | ... | பலிபீடம் |
| மார்பு | ... | மகாமண்டபம் (நடராஜன்) |
| கழுத்து | ... | அர்த்த மண்டபம் (நந்தி) |
| சிரம் | ... | கர்ப்பக்கிரகம் |
| வலது செவி | ... | தட்சிணாமூர்த்தி |
| இடது செவி | ... | சண்டிசேசுவரர் |
| மூக்கு | ... | ஸ்நபந மண்டபம் |
| புருவ மத்தி | ... | லிங்கம் |
| தலையின் உச்சி | ... | விமானமாகும் |
| சோத்திரம் | ... | சரீரப் பிரஸ்தாரம் |



பொதுவாக கோயில்கள் கிழக்கு நோக்கியதாகவே அமைந்துள்ளன. சில மேற்கு நோக்கியும், ரௌத்ர மூர்த்திகளுடையன வடக்கு நோக்கியதாகவும், தட்சணா மூர்த்தி மட்டும் தெற்கு நோக்கியதாகவும் அமைந்திருக்கும்.

கிழக்கு நோக்கியமைந்த ஆலயங்களில் அபிஷேக ஜலம் வழியும் பக்கம் வடக்கு நோக்கி அமைந்திருக்கும்.




கோவிலொன்று கட்டப்படும் போது அதன் திசைகள் உயிர்ப்பிக்கப்பட்ட நிலையில் இருப்பதற்காக ஆலயத்தைச் சுற்றி அவ்வத்திசைகளில் கற்கள் வைக்கப்படுகின்றன. இவை அஷ்டதிக் பாலகர்களைக் குறிப்பதாய் அமையும்.

கோயிலைத் தாபித்தவர் அக்கோயிலின் தந்தை அல்லது மகாத்மா எனப்படுவார். கோயிலில் ஏற்படுத்தப்படும் எவ்வித மாற்றமோ அல்லது மறுசீரமைப்போ இவரது அனுமதியின் பேரிலேயே இடம்பெறும்.

கோயில் கட்டப்பட்டதும் மூலமூர்த்தி பிரதிஷ்டை செய்யப்படும். பிரதிஷ்டை என்பது, அகிலத்தின் சக்திமூர்த்தங்கள் பிராணமந்திரத்தால் ஆவாஹனம் செய்யப்பட்டு புஷ்பத்தில் மந்திர உச்சாடனம் செய்யப்பட்டு கலசத்திலுள்ள நீரில் இடப்படும். பின்னர் இது மனிதத்தோற்றத்தினை ஒத்துள்ள சிலையில் ஊற்றப்பட்டு சக்தியுடையதாக்கப்படுகின்றது. அதாவது மூலமூர்த்தி உயிர் மின்காந்த அலைமூலம் பக்தனுக்கு வரம் தரும் மூர்த்தியாகத் தோற்றம் பெறுகிறார். இனி இது விக்கிரஹம் என அழைக்கப்படும் (விஷேசேன க்ருஹாதி இதி விக்ரஹம்) கர்பகிஹ அமைப்பு தவிர பரிவாரதேவர் எனப்படும் உப – விக்கிரஹங்களும், விநாயகர், அம்பாள், முருகன், நாகராஜர், நவக்ரகம், ஸப்த மாதா என்பன பிரதிஷ்டை செய்யப்பட்டு எழுந்தருளச் செய்யப்படும்.

துவஜஸ்தம்பம் (கொடிமரம்) வைக்கப்பட்டு அதற்குரிய புனர்காரங்கள் செய்யப்படும்.

**கற்களால் சிலைகள் செய்யப்படுவதேன்?** புவியில் பலவகைக் கற்களிருந்த போதிலும் கருங்கல் போன்ற சிலகற்கள் உயிர் அதிர்வுகளை அகத்துறிஞ்சும், வெளித்தெறிக்கச் செய்யும் ஆற்றல் கொண்டிருக்கும். இவ்வகைத்திறண் கொண்டவையே சிலைசெய்யச் சிற்பிகளால் தெரிவுசெய்யப்படுகின்றன. சிற்ப வேலைகள் சிற்ப ஸாஸ்திரப்படியும், பிரதிஷ்ட கர்மங்கள் ஆகம (தந்திர) ஸாஸ்திரப்படியும், பூஜை காலங்கள் வான (ஜோதி) ஸாஸ்திரப்படியும் அமைகின்றன. இவை மூன்றினடிப்படையிலுமே கோயில்கள் இயங்குகின்றன.

கோவில்களின் கற்பக் கிரகத்தில் காணப்படும் மூர்த்தியின் கீழ் ஒரு யந்திரம் வைக்கப்படும் பிரதிஷ்டை செய்ய முன்னர் அந்த யந்திரத்திற்கு தொடர்ந்து மந்திர உச்சாடனம் செய்யப்படும். யந்திரங்கள் மந்திரங்களை சேமித்து வைத்துக் கொள்ளும் சக்தி கொண்டன. பின்னர் அந்த யந்திரம் பல மூலிகைகளினால் மூடப்பட்டு விக்கிரகத்தின் கீழ் வைக்கப்படும். இதுவும் பிரதிஷ்டைகளில் ஒரு வகையாகும். எனவே ஒரு கோயிலில் மந்திரங்கள் உச்சாடனம் செய்யும் போது தொடர்ந்து யந்திரம் தனது சக்தியை சேகரித்த வண்ணம் இருக்கும். இந்த மந்திர அதிர்வுகளானது மிகவும் துல்லியமானவையாகும். இக்காரணத்தினால் கறபக் கிரகத்தை புகைப்படம் பிடிப்பது, ஒளிப்பதிவு செய்வது, வண்ண மின்குமிழ்களை பொருத்துவது ஏற்படுத்தப்பட்ட துல்லிய சக்தியை குறைத்து விடும். ஏனெனில் ஒவ்வொரு கடவுள் உருவத்திற்கும் பின்னணியில் தத்துவ விளக்கமும், அதற்கு சமமான கேத்திரகணித (Geometrical) விளக்கமும் உள்ளன. தத்துவவிளக்கமானது, மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும், கேத்திரகணித உருவமானது யந்திரத்தை அடிப்படையாக் கொண்டதாகவும் அமைந்துள்ளன. மந்திரமும், யந்திரமும் சேர்ந்து தந்திரத்தை உருவாக்குகின்றன. அதாவது "தானயதே விஸ்தாரியதே அனேக ஞானம் இதி தந்திர". உதாரணமாக மகா விஷ்ணு கடவுளுக்கு சுதர்சனம் மந்திரமாகவும் சக்கரம் யந்திரமாகவும் காணப்படுகின்றன.

பிராணா பிரதிஷ்டமானது பிழைக்குமாயின், அதனுடன் தொடர்புடைய கிரியைகளைச் செய்த ஆச்சாரியார்கள் நிரந்தரமாக எதையும் செய்யும் ஆற்றலை இழப்பார் (ஊனமடைவார்)



அக் கர்மாவின் எதிர்விளைவாக ஊனமடைந்த அதாவது உடைந்த விக்கிரகங்களுக்கு பூஜை செய்யின் அதற்குப் பூஜை செய்த பூஜகரின் நிலையும் அவ்வாறாகும். பிரதிஷ்டை செய்த கோவிலில் தினமும் பூஜை செய்யப்படாவிடின் அக்கோவில் அமைந்துள்ள ஊரானது அழிவிற்குட்படுவது மட்டுமல்லாமல், அங்கு வாழும் சமுதாயமும் அழிவிற்குள்ளாகும்.

உயிருள்ள மூர்த்தியின் சக்தியைத் தக்க வைப்பதற்காகச் செய்யப்படுபவையே பூஜைகள். பூஜை செய்பவர் கோயிலின் தொழில் நுட்பவியலாளர் எனப்படுவார். இவர் கோயிலின் தந்தை (மகாத்மாவினால்) தெரிவு செய்யப்படுவார். "பூஜா" என்பதில் வரும் இரு எழுத்துக்களும் வேதங்களினதும், ஸ்மிருதிகளினதும் முழுதத்துவத்தையும் விளக்குகின்றன. "பூ" என்பது புருஷம் என்பதையும் "ஜா" என்பது புருஷத்திலிருந்து பிறந்தது அதாவது பிரக்ருதியையும் குறிக்கிறது.

பிரக்ருதியிலிருந்து அதனைப் பற்றியுள்ள பஞ்ச பூதங்களை விளக்குவதன் மூலம் அதனைப் பூரணத்துடன் இணைப்பதுவே பூஜையின் விளக்கமாகும்.

உலக உருவாக்கத்தின் காரணமான ஐம்பெரும் சக்திகளான ஐம்பூதங்களென வழங்கப்படும் ஆகாயம், வாயு, நெருப்பு, நீர், பூமி என்பன முறையே செவி, மெய், கண், வாய், மூக்கு ஆகிய ஐம்பொறிகளுக்கும் வித்தாகின்றன. இதனைக் குறிப்பதாகவே முறையாக சந்தனம் (கந்தம் – புஷ்பம்), நைவேத்தியம் (சுவை – நீர்), தீபம் (பார்வை – நெருப்பு), தூபம் (ஸ்பரிஸம் – வாயு), புஷ்பம் (கேள்வி – ஆகாஷம்) என்பவற்றால் அர்ச்சனை செய்யப்படுகின்றது.

பஞ்சதன்மேந்திரியங்கள், பஞ்ச ஞானேந்திரயங்கள் என்பது போல இறைவனுக்குரிய பஞ்சோபசாரப் பொருட்களும் ஐந்தாகும். ஒரு பூஜைக்கு இப் பஞ்சோபசாரப் பொருட்களே குறைந்த பட்சத் தேவையாகும்.

கோயில்களில் நிகழும் கிரியைகள் மூவகைப்படும் அவை நித்தியக் கிரியைகள், நைமித்தியக் கிரியைகள், காமியக் கிரியைகள் என்பன. தினந்தோறும் நிகழும் கிரியைகள் நித்தியக் கிரியைகள், பூஜை என இது மக்களிடையே பிரசித்தி பெற்றுள்ளது.

காரணங் கொண்டு நிகழ்வன நைமித்தியக் கிரியைகள். காமியக்கிரியை என்பது பலனை அவாவிச் செய்யப்படும் கிரியையாகும்.

நித்தமும் செய்யப்படுகின்ற பூஜையை நோக்குவோம். கோவிலின் பிரதிஷ்டை முறையின் தன்மையின் அடிப்படையிற்கு ஏற்ப பூஜைகள் பலவகைப்படும்.

கடைசியாகச் செய்யப்படும் பூஜை மிகவும் திருப்தி கரமானதொன்றாக கருதப்படுகிறது. இதில் பங்குபற்றுதல் இறைவனின் தயையை அதிகளவு பெற்றுக் கொள்வதற்கான ஒரு பெரும் வாய்ப்பாகும். அதிகாலைப் பூஜை இவையெல்லாவற்றையும் விட உத்தமமானது.

இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைக்கப்படும் படையல்கள் பக்தர்களுக்கான பிரசாதமாக வழங்குவதகாகத் திருப்பி எடுக்கப் படுகின்றன. இறைவனுக்குச் சாத்தப்படும் மலர் மாலைகளில் மலர்கள் மேல்நோக்கியவாறு கோர்க்கப்படவேண்டும் அத்துடன் இவை கோயிலை அண்டியுள்ள பூக்கடைகளில் வாங்கப்படுதல் நலம். ஏனெனில் இவை பக்தியுடன் கட்டப்பட்டவை, இவையே கர்ப்பக்கிரகத்தினுள் எடுத்துச் செல்லத் தகுதி வாய்ந்தவை. இம்மாலை இறைவனது கழுத்தைச் சுற்றி அணிவிக்கப்படும். அது குரல்வளையினைச் சுட்டுவதால் – அதாவது ஸப்தத்தினையும், ஆகாஷத்தையும் குறிப்பிடுவதாலேயே அவ்வாறு அணிவிக்கப்படுகின்றது. கருவறையிலிருந்து எடுக்கப்படும் இறைவனுக்கு அணிவிக்கப்பட்ட மலர்கள் காதில் வைக்கப்படும் காரணமும் இதுவேயாம்.

சந்தனம், வீபூதி, குங்குமம், மஞசள் யாவுமே மூலிகைத்தன்மை வாய்ந்தவை எனவே இவை மனித உடலின் மூட்டுகளிலே (joints) பூசப்படுகின்றன.

101 பிரதான பிராண நாடிகளில் ஒவ்வொன்றும் 100 கிளை நாடி களையும் 72,000 துணைநாடிகளையும் கொண்ட மனித உடலானது ஒவ்வொரு கிளைநாடியிலும் 50 வேறுபட்ட அதிர்வுகளைக்கொண்ட 6 யோகா தாரங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இது ஆறு கீழ் நோக்கிய தாமைரப்பூக்களுக்கு ஒப்பானது. இவற்றில் ஆறாவது யோகாதாரமான ஆஞ்ஞா(ப்ரு மத்திய) சக்கரம் அனைத்து நாடிகளும் கடக்கும் ஒரு புள்ளியாகும். இது ஒரு முக்கிய அதிர்விடமாகக் கருதப்படுகிறது. இங்கிருந்தே உடலினசைவுகளுக்கான கட்டளைகள் பிறப்பிக் கப்படுகின்றன. இவ்விடத்திலேயே மனம் இருக்கின்றது. அனைத்து



செயற்பாடுகளுக்கும் மனமே காரணமாதலால் அதனைக் கட்டுப்படுத்துவதே வாழ்வின் இலட்சியமாகின்றது.

அதாவது மோகங்கள் தோற்றம் பெறும் மனத்தை அடக்கல் மோட்சமாகிறது. (மோகம் + ஷயம் (அழித்தல்) இதனை கட்டுப்படுத்துமுகமாகவே வீபூதி, சந்தனம், குங்குமம் போன்ற பிரசாதங்கள் ஆஞ்ஞா (நெற்றி) சக்கரத்தில் இடப்படுகின்றன.

பெண்கள் அதிகளவு லௌகிகத்திலீடுபாடுடையவர்கள், இதனால் அதிக அவஸ்தைகளுக்குள்ளாகுபவர்களும் இவர்களே. இருபாலரிலும் பெண்களே மனதில் மென்மையுடையவர்கள். அதன் காரணமாக அதிகமான அதிர்வலைகளை ஏற்படுத்துவதால் வாழ்வு இவர்களுக்கு கடினமாகத் தோன்றுகிறது. இந்து தர்மத்தில் பெண்பிள்ளைகள் சிறுவயது முதல் திலகம் அணியும் பழக்கம் ஏற்படுத்தப்பட்டதும் இதன் அடிப்படையிலேயாம்.

சகஸ்ர தளத்துடனான ஜீவாத்மாவின் பிரதேசமானது கூந்தலை சரி நடுவில் பிரிக்கவரும் சீமந்த ரேகையாகும். (நேர்வகிடு)

திருமணத்தின் பின் பதியைக் குறிப்பதான பவித்திரமான மாங்கல்ய குங்குமம் இச் சீமந்தரேகையிலேயே தரிக்கப்படுகின்றது. கணவனது மதிப்பையும், உயிரையுமே இது குறித்து நிற்கிறது.

தீபாராதனையின் போது அனைத்து மணிகளும் ஒலிக்கப்படுவது மகாசக்தியை எழுந்தருளச் செய்யவேயாம். கர்ப்பக் கிரகத்திலிருந்து வெளிக்கோபுரம் வரை நேர்கோட்டில் இச்சக்தி பரவுவதால் பக்தர்கள் அவ்வழியினை மறைத்து நிற்க அனுமதிக்கப்படுவதில்லை. அவ்வாறு நிற்பின் அவர்கள் அவ்வுயிர் மின்காந்தக்கதிர்களின் தாக்கத்திற்குள்ளாவர்.

பூஜையின் பின்பு வழங்கப்படும் தீர்த்தமானது பூஜையின் அமிர்தமாகும். இதனை அருந்தி மிகுதியைச் சகஸ்ர தளத்தில் பூச வேண்டும். (உச்சந் தலை) இது உடலினுள் வசிக்கும் ஜீவாத்மாவை மரியாதை செய்யும் பொருட்டேயாம்.

**தீர்த்தம்**

துளசி, வில்வம் போன்ற மருத்துவ சக்தி வாய்ந்த மூலிகை இலைகள் இடப்பட்ட நீரானது உயிருள்ள விக்கிரத்தின் மேல் ஊற்றப்பட்டு பெறப்படும் நீரே தீர்த்தம் எனப்படும். இத் தீர்த்தம் உயிர் மின்காந்த அதிர்வுகளை அகத்துறிஞ்சி வைத்தருப்பதால், இப் புண்ணிய நீர் எமது அகத்தையும் புறத்தையும் சுத்தம் செய்வதோடு உடல் நோய் தீர்க்கும் அமிர்தமாகவும் விளங்குகின்றது.

**நமஸ்காரம்**

"நம" என்பது "மந" என்பதன் எதிர்ப்பதம். அதாவது சிருஷ்டியின் போது சிருஷ்டிகர்த்தா மனித மனத்தை வெளிமுகமாகப் "பாயும்" வண்ணமே சிருஷ்டித்துள்ளார். இதனாலேயே நாம் சம்சாரிகளாகவுள்ளோம். எவனொருவன் மனத்தை உள்முகப்படுத்தும் ஆற்றலைக் கொண்டி ருக்கின்றானோ அவனே பந்தங்களிலிருந்து விடுபட்டவனாவான். புறவழியோடும் மனத்தை அகத்தினை நோக்கித்திருப்பும் செயன்முறைப் பயிற்சியே நமஸ்காரமாகும்.

ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் முறையாகும். நமஸ்காரமென்பது அகங்காரத்தை விடுத்து எம்மை இறைவனிடம் முழுமையாக சரணாகதியடையச் செய்து இறை அனுபூதியைப் பெற்றுத்தரும் செயலாகும். கோயிலில் நமஸ்காரமானது துவஜஸ்தம்பம் முன்னால் மட்டுமே செய்யப்படல் வேண்டும்.

**குறிப்பு**

நமஸ்காரத்தின் போது சக்திமாற்றீடு நடைபெறுவதால் இது மிகவும் சிரத்தையுடன் செய்யப்படவேண்டும். நமஸ்காரத்தின் போது யாதேனும் அர்ப்பணம் செய்யப்படல் வேண்டும். இது தட்சிணை எனப்படும்.

**பிரதிட்சணம்**

ஒருவரின் தனித்தன்மையைப் பாவித்து (ஜீவபாலம்) இறைவனிடம் இரண்டறக் கலத்தலே (பரமபாலம்) பிரதட்சணம் எனப்படுகின்றது.



விக்கிரகத்தின் வலப்புறம் ஆரம்பித்து இடப்புறமாகப் பிரதிட்சணம் செய்தலே சரியானது. இதன் போது கோயில் வாசலின் திசை கருத்திற் கொள்ளப்படத் தேவையில்லை. இது ஒரு திருகாணியை மரச்சட்டத்தினுள் திருகுவது போன்று மிக மெதுவாகச் செய்யப்பட வேண்டும்.

கைகளை ஒருங்கிணைத்து அஞ்சலி செய்யும் நிலையில் வைத்திருக்க வேண்டும். விக்கிரத்தை மனதில் இருத்தியவண்ணம் கடவுளின் நாமத்தை ஜபம் செய்தவாறு வலம்வர வேண்டும்.

ஏனைய புறச் சத்தங்களை மந்திரங்களை உச்சாடணம் செயவதன் மூலம் தவிர்த்து கொள்ளலாம். மனம் வேறுவழி ஓடாதிருக்க இறையினுருவம் மனக்கண்ணின் முன் கொண்டுவரப்படுகின்றது. கர்ப்பக்கிரகம் திறந்துள்ள போதே பிரதிட்சணம் செய்யப்படல் வேண்டும். அல்லாவிடின் அது மூலமூர்த்திக்குத் தீங்கினை ஏற்படுத்தும்.

அந்தர் தாரா பிரதிட்சணமானது (வெளிவீதி) கர்ப்பக்கிரக (உள்வீதிப்) பிரதிட்சணத்தைவிட மும்மடங்கு நன்மை பயப்பது. முழுக் கோயிலையும் பிரதிட்சணம் செய்தல் கர்பக்கிரக பிரதிட்சணத்திலும் நான்கு மடங்கு நன்மை பயப்பதாகும்.

**மூர்த்திகளை பிரதிட்சணை பண்ண வேண்டிய எண்ணிக்கையளவு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விநாயகர் | - | 1 | தர்ம ஷாஸ்தா | - | 5 |
| சூரியபகவான் | - | 2 | சண்முகன் | - | 6 |
| சிவன் | - | 3 | அரசமரம் | - | 7 |
| விஷ்ணு, அம்பாள் | - | 4 | நவக்ரகம் | - | 9 |

வீட்டில் அமங்களம் நிகழ்ந்துள்ள போது கோயிலினுள் பிரவேசிக்காது அரசமரத்தினை (அஷ்வத விருக்ஷம்) மட்டும் வலம் வருதல் அனுமதிக்க ப்பட்டுள்ளது.

ஆண்கள் சயனப் பிரதட்சணமும், பெண்கள் அடிப்பிரதிட்சணமும் செய்தல் முக்கியமாகும். பெண்கள் சயனப்பிரதிட்சணம் (அங்கப்பிரதிட்சணம்) செய்யக்கூடாது.

**கற்பூரம் எரிப்பதன் பொருள் என்ன ?** தூய கற்பூரம் நெருப்பில் எரிந்து கரியோ சாம்பலோ இல்லாமல் காற்றுடன் கலந்து விடுகிறது. அதுபோல ஆன்மா இறைவனுடைய அருள் ஜோதியில் இரண்டறக் கலந்து ஒன்றுபட வேண்டுமென்பதே இதனாலுணர்த்தப்படுகிறது.

**தேங்காய் உடைப்பதன் நோக்கமென்ன ?** தேங்காயின் புறஓடு உலகமாயையையும், உள்ளீடு பரம் பொருளையும், இளநீர் திருவருளையும் குறித்து நிற்கும். எனவே தேங்காயுடைக்கும் செயலானது மாயையினை அகற்றி பரஞான ஒளியைக் காட்டி அதனருளால் பரமானந்த அமிர்தத்தை நுகரச் செயதலைக் குறிக்கின்றது.

கோயிலின் சக்தி மகிமையானது காலத்தினாலும், பக்தர்களால் காவப்படும் துஷ்ட அதிர்வுகளாலும் குறைவுற்றுச் செல்கிறது. இதனை ஈடுசெய்யும் முகமாக 12 வருடங்களுக்கு ஒரு தடவை மஹாகும்பாபிஷேகம் செய்யப்படுகின்றது.

இது தவிர பிரதிஷ்டைக் காலங்களில் ஆகம முறைப்படி செய்யப்படும் இவ்வபிஷேகம் புது ஆலயம் அமைத்ததும் (அநாவர்த்தனம்), மறைந்து போன ஆலயத்தை திரும்ப அதே இடத்தில் அமைத்ததும் (ஆவர்த்தனம்), பழுதடைந்த ஆலயத்தைத் திருத்தி அமைத்ததும் (புனராவர்த்தனம் அல்லது ஜீர்ணோத்தாரணம்) ஆலயத்துக்குள் முறை தவறி நடந்த செயல்களை முன்னிட்டும் (திருடர் புகுதல், அகால மரணம் சம்பவித்தல் முதலியன) செய்யப்படும். இக்கும்பாபிடேகங்கள் அவற்றைச் செய்வதற்குரிய சிவாசாரியர்களை நியமித்து அவர்கள் முன்னிலையில் இடம் பெறுகின்றன.

முதலாவதாக அனுக்ஞை கிராமசாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்ன ஹோமம், திசாஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்திஹோமம், வாஸ்து சாந்தி, நவக்கிரகமகம், மிருத்சங்கிரகனம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம் ஆகியவை செய்யப்படும். இவை பூர்வாங்கக் கிரியைகளாகும்.

இவற்றைத் தொடர்ந்து பொன், வெள்ளி, பஞ்சலோகம் ஆகியவற்றில் ஒன்றினால் அமைக்கப்பட்ட குடத்தினை கும்பமாக உருவாக்கிய பின் பட்டு, பூனூல், வெளியே அலங்கரிக்கும் அலங்காரக் கச்சம், சந்தனம், மலர் மாலை முதலியவற்றைச் சாத்தி கலசத்தையும் அஷ்டசித்தியேசுவரர் கும்பங்களையும் ஸ்தாபித்தல் வேண்டும்.



உருவாக்கிய கும்பங்களை அநாவர்த்தன, ஆவர்த்தன, அந்தர்தர பிரதிட்டை வைபவங்களில் ஆகம முறைப்படி அமைந்த யாக மண்டபங்களிலும், புரராவர்த்தன பிரதிட்டை வைபவங்களில் மூலமூர்த்திக்கு முன்வைத்து கலாகர்ஷண கிரியை செய்து பின் கும்பங்களை அங்கிருந்து எழுந்தருளச் செய்து முறைப்படி ஓமங்கள், பூஜைகள் செய்யப்பட வேண்டும். இந்நிலையில் மூலஸ்தானத்தில் பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் முதலானவை நிகழும். யாக சாலையில் ஸபர்காகுதி முதலான கிரியைகள் முடிவுற்றதும் யாகசாலையிலிருந்து கலசம் புறப்பட்டுக் கும்பாபிடேகம் நிகழும் இடத்திற்கு எடுத்து செல்லப்பட்டு கும்பாபிடேகம் நிகழும். கும்பாபிடேகம் முடிவுற்றதும் மகாவிர் நிவேதனமும், தரிசனமும், தசதரிசனமும் நிகழும். தொடர்ந்து எஜமான அபிடேகமும் ஆசாரியர் பூசையும் மகாபிடேகமும் நடைபெற்று இரவு திருக்கல்யாணத் திருவிழாவுடன் கும்பாபிடேகம் நிறைவுறும்.

கும்பம் என்பது உடம்பின் பாவனை அதிலே சுற்றிய சீலை – தோல், நூல் – நாடி, குடம் – தசை, தண்ணீர் – இரத்தம், இடப்படும் இரத்தினம் (காசு) – எலும்பு, தேங்காய் – தலை, மாவிலை – தலைமயிர், தருப்பை – குடுமி அதிலே பதிக்கப்படும் மந்திரம் – உயிர் என்பதனைக் குறித்து நிற்கும்

இது தவிர கோயில் கொண்டுள் மற்றுமோர் சிறப்பம்சமானது

யாகம் அல்லது யக்ஞையில் பிரயோகிக்கப்படும் மூவகை அக்னிகளான (ஹமஷ்டி பாவனம்) 1. தக்ஷினாக்கினி 2. கார்ஹயாக்னி 3. அஹவநீயாக்னி என்பனவற்றையும் மனிதனுள் காணப்படுகின்ற மூவகை அக்னிகளான 1. ஜ்டாக்னி 2. ஞானாக்னி 3. ஜீவாக்னி என்பவற்றையும் இணைக்கும் வகையிலே மூன்று வித அக்னிகளை உடையதாக இருக்கிறது.

அவை 1) மூலமூர்த்திலே பதிக்கப் பட்டுள்ள அக்னி
2) இறைவனுக்கான நைவேத்தியம் தயார் செய்யப்படும் திடப்பள்ளி அக்னி
3) பூஜையின் போதிலான கருமங்களை ஆற்ற உபயோகிக்கும் அக்னி எனபவையே.

**கோயிலுக்கு எவ்வாறு செல்லல் வேண்டும் ?**

நீராடி, துவைத்துலர்ந்த ஆடை அணிந்து, பழம், பாக்கு வெற்றிலை, கருப்பூரம் ஆகியவற்றைத் தூய்மையான பாத்திரத்தில் வைத்து அதனை அரையின் மேல் தூக்கிப்பிடித்தவாறு பக்தி சிரத்தையுடன் கோயிலை அடைதல் வேண்டும்.

கோயிலில் முதலில் தூலலிங்கமான கோபுரத்தை வணங்கி, திருக்குளத்தில் நீராடி அல்லது கிணற்றில் கால்களைக் கழுவி ஆசமனம் பண்ணியபின் கோயிலினுள்ளே போதல் வேண்டும்.

முதலில் வணங்க வேண்டியவை பலிபீடம், துவசத் தம்பம், நந்தி என்பன. வணங்கும் போது மேற்கு நோக்கிய சந்நிதியாயின் பலி பீடத்துக்கு இப்பால் இடப்பக்கத்திலும், வடக்கு நோக்கிய சந்நிதியாயின் அதற்கு வலப்பக்கத்திலும் வணங்குதல் முறையாகும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும் செய்யலாம்.

துவாரபாலகரையும், கணநாதராகிய நந்திதேவரையும் வணங்கி உத்தரவு பெற்று, முதலில் விநாயகரையும், பின் சிவலிங்கப்பெருமானையும், உமாதேவியாரையும் வணங்கி, ஆதிசைவரைக் கொண்டு அர்ச்சனை செய்வித்தல் வேண்டும். பரிவார தெய்வங்களைப் பின்னர் வணங்க வேண்டும். விநாயகப் பெருமானை வணங்கும் போது முட்டியாகப்பிடித்த இரு கைகளினாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும் இடக் காதை வலக்கையினாலும் பற்றியபடி கால்களையும் குறுக்காக இட்டு தாழ்ந்தெழ வேண்டும். இது குறைந்தபட்சம் பன்னிரெண்டு தடவை செய்யப்படல் வேண்டும்.

அடுத்ததாக முட்குறித்தவாறு பிரதட்சனஞ் செய்தல் வேண்டும். இதனைத் தொடர்ந்து பூஜையையும் தரிசித்த பின் ஒரு பக்கத்திலிருந்து பஞ்சாட்சர மந்திரத்தைச் செபிப்பது சிறந்தது. பின் சண்டேசுரரை மூன்றுமுறை கைகொட்டச் சிவதரிசனப் பலனைத் தருமாறு இரந்து வேண்டிப் பிரார்த்தித்தல் வேண்டும். பின்பு வலமாக வந்து நந்திதேவரின் இருகொம்புகளினூடாக சிவபெருமானைத் தரிசித்து பலிபீடத்திற்கு இப்பால் மும்முறை நமஸ்காரித்து அதன் பின் பின்புறமாய்ச் செல்லாது கோபுரத்தைக் கடந்து வெளியேறல் வேண்டும். திங்கட் கிழமைகளிலும்,



பிரதோஷ காலங்களிலும் கோமுகையைக் கடத்தல் கூடாது. கோமுகைவரை சென்று பின்பு இடப்பக்கமாய்த் திரும்பி வலம்வரல் வேண்டும்.

நாள்தோறும் சிவதரிசனம் செய்வது மிகவும் சிறந்தது. அதற்கு வாய்ப்பு இல்லாவிடின் சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயக சதுர்த்தி, கந்தஷஷ்டி, உற்சவ தினங்கள் முதலிய காலங்களிலே சிவதரிசனம் செய்தல் வேண்டும்.

**திருக்கோயிலிலே செய்யத் தகாதவை**

திருக்கோயிலிலே செய்யத்தகாதவை என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தமது இரண்டாம் சைவ வினாவிடையிலே முப்பத்தாறு குற்றங்களை எடுத்துக் காட்டியுள்ளார்கள். அவை வருமாறுஹ

ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்குநீர் சிந்துதல், பாக்கு வெற்றிலையுண்டல், போசனவானம் பண்ணுதல், ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர்கோதி முடிதல், சூதாடல், சிரசிலே வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக் கொள்ளுதல், போர்த்துக் கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், பாதரட்சையிட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி, துவஜஸ்தம்பம், பலிபீடம், இடபம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல், வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும், பலிபீடத்திற்கும் குறுக்கே போதல், ஒருதரம், இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம், இரு தரம் வலம் வருதல், ஓடி வலம் வருதல், சுவாமிக்கும், பலிபீடத்துக்குமிடையே நமஸ்கரித்தல், அகாலத்திலே தரிசிக்கப் போதல், திரையிட்டபின் வணங்குதல், அபிஷேக காலத்திலும், நிவேதன காலத்திலும் வணங்குதல், முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் வணங்குதல், திருவிளக்கு ஒளிகுன்றக் கண்டுந்தூண்டாதொழிதல், திருவிளக்கில்லாத போது வணங்குதல், உற்சவங் கொண்டருளும்போது அங்கேயன்றி உள்ளே போய் வணங்குதல் முதலியவைகளாம். இக்குற்றங்களுள் ஒன்றை அறியாது


செய்தவர், அகோர மந்திரத்தில் ஆயிரம் உருகச் செபிக்கின் அக்குற்றம் நீங்கும். இக்குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்.

ஆலயத்தின் நித்திய கருமங்கள் சரியான முறையில் செய்யப்படாவிடின் அஃது முதலில் ஆலய பரிபாலன சபையினரையே பாதிக்கும். இது அக்குடும்பத்தில் வலது குறைந்த குழந்தைகளின் பிறப்பினாலும், தொடர்ச்சியான இறப்புக்களினாலும், தீராத ரோகங்களினாலும் வெளிப்படும். பிரசாதம் தவிர எந்தவொரு கோயில் சொத்தும் அஃதொரு தேங்காயாயினும் ஒரு பிடி மண்ணாயினும் சுயதேவைக்காக எடுத்துக்கொள்ளக் கூடாது. கோயிலிற்குச் செல்லும் போது யாதாயினுமொரு சமர்ப்பணம் செய்தாக வேண்டும். உதாரணம்ஹ பணம், மலர்..... தூய்மையாக இல்லாத போது கோயிலிற்குச் செல்லக் கூடாது.

சுருதிகளையும் (வேதம்), ஸ்மிருதிகளையும், இதிகாசங்களையும், புராணங்களையும் அடிப்படையாகக் கொண்ட ஸனாதன தர்மமானது செயல் முறையாகப் பின்பற்றப்பட கடினமானதாகக் கருகப்படுவதால் சம்பிரதாயத்திலிருந்து விலகிச் செல்லுபவர்களை சமயவழியில் நடத்துவதே பிரதட்சணம், நமஸ்காரம், ஆரத்தி ஆகியனவற்றின் ஆகமரீதியான நுட்பத்தின் அடித்தள நோக்கமாகும்.

கோயில்கள் சனாதன தர்மத்தின் மிக முக்கிய தூண்களாகும். இவை மனித குலத்தின் பௌதிக, சமூக, கலாச்சார, அறிவியல் மேம்பாட்டிற்கு வழிகோலுகின்றன. கோயில்களில் கற்பிக்கப்படும் வேத பாடங்கள் ஆசாரங்களென்பன அதனுட்பொருளை தத்துவத்தை அறிந்து பின்பற்றுகிறபோது குழந்தைகளினதும் பெரியோர்களினதும் அறிவியல் ரீதியான அணுகுமுறைகளுக்கும் நடைமுறைவாழ்வின் அணுகுமுறை களுக்கும் பெரிதும் உதவுகின்றன.





கோவில் அமைப்பு

1. கர்ப்பக்கிருகம்.
2. அர்த்த மண்டபம்.
3. மஹா மண்டபம்.
4. சண்டேஸ்வரர் கோயில்.
5. அம்பாள் கர்ப்பகிருகம்.
6. நிருத்த மண்டபம்.
7. பள்ளியறை.
8. நடராஜர் ஆலயம்.
9. ஸ்தம்ப மண்டபம்.
10. பாகசாலை.
11. பாகசாலை.
12. நால்வர்.
13. பக்தாலயம்.
14. அம்பாள் கோபுரம்.
15. சந்தான குரவர்.
16. வாகனசாலை.
17. பிள்ளையார்.
18. சோமாஸ்கந்தர்.
19. சந்திரசேகரர்.
20. பிக்ஷாடனர்
21. மஹாவிஷ்ணு.
22. சுப்பிரமணியர்.
23. வசந்த மண்டபம்.
24. ஆகம நூல் நிலையம்.
25. யாகசாலை.
26. பைரவர் ஆலயம்.
27. சூரியன்.
28. கோபுரவாசல்.
29. சந்திரன்.
30. கிணறு.
31. கிணறு.



# வேதம் ஒரு சாரம்

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | திருத்தம் |
|---|---|---|
| முகப்பு உள் | 4 | குருபரம்பரஹ |
| ஆசியுரை | 4 | அமைப்பும் விஞ்ஞான விளக்கமும் |
| தலைவரிடமிருந்து | 1 | தலைவரிடமிருந்து |
| | 2 | கலப்பாலும் |
| | 12 | எழுந்து |
| செயலாளரிடமிருந்து | 1 | விதையென |
| 10 | 21 | ஏற்றப்பட்டு, உயிர் ஜீவராசிகள் |
| 11 | 17 | கோயில்களின் |
| 12 | 29 | சண்டிகேசுவரர் |
| 14 | 5 | அகத்துறிஞ்சும் |
| 14 | 29 | விஸ்தாரியதே அனேன |
| 15 | 17 | ஆகாஷம் |
| 16 | 10 | வழங்குவதற்காக |
| 19 | 8 | செய்வதன் |
| 19 | 23 | அஷ்வத்தா |
| 20 | 10 | சக்தி, மகிமையானது |
| 21 | 18 | கொண்டுள்ள |
| 21 | 19 | சமஷ்டி பாவனா |
| 21 | 20 | 2. கார்ஹபத்னியாக்னி |
| 21 | 21 | 3. ஆஹவநீயாக்னி |
| 21 | 22 | ஜடராக்னி |
| 22 | 8 | துவஜஸ்தம்பம் |
| 23 | 12 | வருமாறு |
| 23 | 14 | வெற்றிலையுண்ணல் |
| 24 | 14 | கருதப்படுவதாய் |
| 29 | 4 | எழுதப்பட்டவை அல்ல |
| 29 | 10 | குருபரம்பரை |
| 29 | 26 | பிராமணங்களும் |
| 29 | 26 | காண்டத்தினுள்ளும் |
| 29 | 27 | உபாசன |
| 29 | 28 | பகுப்பும் |

| பக்கம் | வரி | திருத்தம் |
|---|---|---|
| 30 | 6 | பாதராயனரே |
| 30 | 7 | தொடுத்தார். |
| 30 | 15 | ப்ரஸ்தனத்ரயங்களை |
| 30 | 21 | எடுக்கப்பட்டு |
| 31 | 1 | சுக்கில |
| 31 | 2 | கிருஷ்ண |
| 31 | 2 | தைத்தரீய |
| 31 | 7 | காந்தர்வ வேதம் |
| 31 | 8 | ஸ்தாபத்ய வேதம் |
| 31 | 14 | கிரியா முறை |
| 31 | 16 | சந்தஸ் |
| 31 | 23 | யாக்ஞ வல்கியஸ்மிருதி |
| 31 | 29 | வான்மீகி |
| 31 | 22 | ஒவ்வோராகமங்கள் |
| 32 | 3 | அவையாவன |
| 33 | 8 | ஜைன தர்ஷனம் |
| 33 | 9 | சார்வாக தர்ஷனம் |
| 33 | 10 | ஆஸ்திக தர்ஷனங்கள் |
| 33 | 12 | வைசேசிகா தர்ஷனம் |
| 33 | 16 | உத்தரமீமாம்ச தர்ஷனம் |
| 33 | 17 | வேதாந்தம் |
| 33 | 20 | உத்தரமீமாம்சா |
| 33 | 23 | ஸ்ருதிபிரஸ்தானமான உபநிடதம் |
| 33 | 25 | பிரஸ்தானமான |
| 34 | 11 | குருபரம்பரை |
| 35 | 1 | வனம் |
| 35 | 4 | புரி |
| 35 | 17 | சூத்ர பார்ஷ்ய |
| 35 | 22 | குருபரம்பரஹ |
| 36 | | |

| இல | நிரை | திருத்தம் |
|---|---|---|
| 1 | 1 | அக்ஞா |
| 2 | | விசுத்தி |
| 3 | | அனாகதம் |
| 5 | 3 | ஜலம் |
| 6 | 1 | மூலாதாரம் |

"வேதம்" எனும் சொல்லானது "வித்" (VIDH) எனும் அடியிலிருந்து பிறந்ததாகும். "வித்" என்பது "அறிவதற்கு" என்று பொருள்படும். எனவே வேதம் என்பது அறிவையே குறித்து நிற்கிறது.

வேதங்கள் யாராலும் எந்த புருஷனாலும் எழுதப்பட்டவை அல்ல இவை தீர்க்கமான ஆதியும் அந்தமும் காணாத உண்மையில் இருந்து நேரடியாகப் பெறப்பட்டவையாதலால்"எழுதாமறைகள்"எனப்படுகின்றன. "அபௌருஷேயம்" என இவை இயம்பப்படுவதற்கும் இதுவே காரணமாகும். தோற்றிய காலமும், முடிவு என்பதும் இல்லாதமையால் "அனாதி" என்றும் இது வழங்கப்படுகின்றது.

வேதங்கள் ஒலிவடிவில் செவிவழியாக குரபரம்பரை வழியாக வந்தமையால் "ஸ்ருதி" என்றும் பெயர்பெறுகின்றன. வேதங்களின் பாகுபாடானது இருவகைப்படும். அதாவது 1) கிடையான பாகுபாடு 2)நிலைக்குத்தான பாகுபாடு.

கிடையான பாகுபாட்டிற்கமைய வேதங்களானது மந்திரங்கள், பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிஷதங்கள் என்று பிரிக்கப்படுகின்றன.

ஸம்ஹிதைகள் என்று வழங்கப்படும் மந்திரங்களானது மந்திரங்களை உள்ளடக்கியுள்ளன. பிராமணங்கள் செயன்முறைப் பகுதியான கிரியைகளையும், ஆரணியகங்கள் – உலகத் ( லௌகிகத்) தாக்கங்களற்ற கானகங்களில் செய்யப்படும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளை உள்ளடக்கியதாகவும்

உபநிடதமானது மேற்குறித்த மூன்றினதும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட முடிவுத் தொகுப்பாக அமைகின்றது. எனவே உபநிடதமானது வேதாந்தம் எனப்படுகிறது. இதன் பிரசித்திக்குக் காரணமும் இதுவே.

மந்திரங்கள், பிராமணங்கள், ஆரணியகங்கள் மூன்றும் கர்ம காண்டத்தினுள்ளும், உபநிடதங்கள் ஞானகாண்டத்தினுள்ளும் அடக்கப்படும். மந்திரங்களும் பிரமாணங்களும் கர்ம காண்டத்திலுள்ளும் ஆரணியம் உபசான காண்டத்தினுள்ளும் உபநிடதம் ஞான காண்டத்தினுள்ளும் அமையுமாறு இன்னுமோர் பகுப்பு வழக்கத்திலுள்ளது.

ஆரம்ப நாளில் அறிவானது விரிந்து பரந்துபட்டுக் காணப்பட்டமையால் எதை எங்கு ஆரம்பிப்பது, எப்படி கற்பது, எவ்வாறு தொடர்வது என்பது குழப்பமாக இருந்தது. முக்கியமாக உபநிடதங்கள் சிதறிக் காணப்பட்டது.

இந்த காலகட்டத்திலேயே கிருஷ்ண துவைபாயனர் என்று அறியப்பட்ட பாதராயணர் பராசரா ரிஷிக்கும் மட்ச்சகந்தி (கஸ்துாரி கந்தி எனும் படகோட்டிப் பெண்) க்கும் புத்திரராக அவதரித்தார். பாரதராயனரே பரவிக்கிடந்த இவ்வறிவை ஒன்று திரட்டி அதனை வகுத்துத் தொகுத்தார் இதுவே நிலைக்குத்தான பகுப்பாக அறியப்படுகிறது.

இதன்பின்னரே வேதங்கள் அனைவராலும் கற்கக்கூடியவாறு இலகுபடுத்தப்பட்டன. இவ்வாறு வேதங்களை முதலில் பகுப்பு செய்தமையால் "வேதவியாசர்" என்று பெயர் வழங்கப்பட்டு சனாதனதர்மத்தின் ஆச்சாரியாக இவர் ஏற்றுக்கொள்ளப் பட்டார்.

இவரது ஜயந்தியானது குருபூர்ணிமாவாகக் கொண்டாடப் படுகின்றது. தீட்சை, பிரமச்சரியம், சந்நியாசம் வாங்குதல் என்பன இப்புனித தினத்தில் நிறைவேற்றப்படுகின்றன. பரஸ்தானஸ்த்ரயங்களை அடிப்படையாகக் கொண்ட வேதாந்த தர்ஷணத்தை நமக்குத் தந்தவரும் இவரே. நிலைகுத்துப் பாகுபாடான ரிக்வேதம், யஜூர்வேதம், சாம வேதம், அதர்வ வேதம் ஆகியன அவரது சீடர்களான பைலர், வைஷம்பாயணர், ஜைமினி, சுமந்து ஆகியவர்களுக்கு முறையாக கற்பிற்கப்பட்டது.

வியாச பகவானின் வேதத் தொகுப்புகளில் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வோர் வாக்கியம் எடுக்கப்பட்டு அவை மஹாவாக்கியங்களாகக் கொள்ளப்பட்டன.

1) "ப்ரக்ஞானம் ப்ரம்ம" - ஐத்தரேய உபநிடதத்திலிருந்து - பொருள் : அறிவே ப்ரம்மன்
2) "அஹம் ப்ரம்மாஸ்மின்" - ப்ரகதாரன்யக உபநிடதத்திலிருந்து பொருள் - நானே ப்ரம்மன்.
3) "தத்வமசி" சாந்தோக்கிய உபநிடதத்திலலிருந்து பொருள்: நீயே அது வாகிறாய் - அதுவே நீயாகிறாய்.
4) "அயமாத்மா ப்ரம்மா" - மாண்டுக்கிய உபநிடதத்திலிருந்து - பொருள் - ஆத்மாவே ப்ரம்மன்.



யஜுர் வேதமானது மேலும் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. அவை கிருஷ்ண யஜுர் வேதம். (வாஜசநேயி விபாகம்) சுக்கில யஜுர் வேதம் (தைரேய விபாகம்)

வேதங்களானது நான்கு உப வேதங்களை கொண்டவை.
அவையாவன ஆயூர் வேதம் ,
தனுர் வேதம்
காந்தர வேதம்
ஸ்திபத்ய வேதம்

வேதங்களில் உள்ள உட்பொருளான நிதர்சன உண்மைகள் மனிதர்களுக்குப் புரியும் படியாக அவர்களது நடைமுறை வாழ்விற்கு பயன்படும் வகையிலாக ஒழுக்க விதிகளாக இயற்றப்பட்டவை ஷாஸ்த்திரங்கள் எனப்படுகின்றன. இவை ஆறு வகைப்படும்

1) சிக்ஷா – உட்சாடனம் செய்யும் முறை (Phonetics)
2) கல்ப – கிரியைமுறை – (சிக்ஷையின் பொருள்) (Rituals)
3) நிருத்தம் – பதங்களுக்கிடையிலான தொடர்பு (Etymology)
4) சந்தாஸ் – வார்த்தைகளின் சப்த ஒழுங்கமைப்பு
5) வியாகரணம் – சொல் இலக்கணம்
6) ஜோதிஷம் – காலம் பற்றிய கல்வி

இவை பதின்னாங்கினைத் தவிர ரிஷிகளால் பரீட்சிக்கப்பட்டு தமது அனுபவ உரைகள் சேர்க்கப்பட்டு இலகுவாக்கப்பட்ட நிலையில் நமக்குத் தரப்பட்டவை "ஸ்மிருதிகள்" எனப்பட்டன. அவற்றுள் முக்கியமான மூன்று ஸ்மிருதிகளவான
1) மனுஸ்மிருதி
2) ஞாக்கியவல்கியஸ்மிருதி
3) பராசர ஸ்மிருதி

இவற்றையடுத்து வேதங்களைப் பாமரனும் புரிந்து கொள்ளக் கூடியவாறு எளிமைப்படுத்தி கதைவடிவிலே வாழ்க்கை வழிமுறைகளை, தர்மங்களைச் சொல்லுபவை இதிகாசங்கள் எனப்பட்டன. அவையாவன எம்மிடையே புகழ் பெற்ற இராமாயணமும், மகாபாரதமுமாம். இராமகதையை நமக்குத் தந்தவர் வானிமீகி மகாபாரதத்தையாக்கியவர் வியாசபகவான்.

யோகாவாஷிஸ்டம், ஹரிவம்சம் என்பனவும் ஏனைய இதிகாசங்களாகும்.

ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையிலான கதைவடிவிலான கடவுள் சார்ந்த தத்துவங்கள் பொதிந்த இலக்கணவடிவமான புராணங்கள் இதனையடுத்து அமைகின்றது. அவையவன

| | | |
|---|---|---|
| பிரம்மம் | மார்க்கண்டேயம | ஸ்காந்தம் |
| பாத்மம் | ஆக்நேயம் | வாமனம் |
| வைஷ்ணவம் | பவிஷயம | கூர்மம் |
| சைவம் | பிரம்மவை வர்த்தம் | மால்ஸ்யம் |
| பாகவதம் | லிங்கம் | காருடம் |
| நாரதியம் | வராஹம் | ப்ரஹ்மாண்டம். |

பதினெண் உபபுராணங்களாவன

| | | | |
|---|---|---|---|
| 1) | சனத்குமாரிய புராணம் | 10) | ஔசசை புராணம் |
| 2) | சிவதர்ம புராணம் | 11) | வசிஸ்ட புராணம் |
| 3) | காணத்ய புராணம் | 12) | வருண புராணம் |
| 4) | காளிகா புராணம் | 13) | சாம்ப புராணம் |
| 5) | நந்திகுமார புராணம் | 14) | மகேச்வர புராணம் |
| 6) | துர்வாச புராணம் | 15) | பராசிர புராணம் |
| 7) | நாரதகுமார புராணம் | 16) | சௌர புராணம் |
| 8) | கபில புராணம் | 17) | நரசிம்ம புராணம் |
| 9) | மாணவ குமார புராணம் | 18) | தேவிபாகவர புராணம் |

இவற்றை அடுத்து அமைவது ஆகமங்கள் – தேவதைகள் இன்னும் பிற சக்திகளை விழிப்பித்தல்(invoking) முறைகள் இதிலடங்கியுள்ளன். ஒவ்வொரு சமயத்திற்கும் ஒவ்வோரகமங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவ்வழியே சைவசமயத்தில் அடங்கும் ஆகமங்களாவன (28)

| | | | |
|---|---|---|---|
| காமிகம் | சுப்ரபேதம் | வீரம் | திப்தம் |
| விஜயம் | சந்தானம் | யோசஜம் | முகபம்பம் |
| ரௌபரம் | ஆஷ்மம் | நிசுபாசம் | சர்வோக்தம் |
| சிந்தியம் | புரோகிதம் | மகுடம் | சகச்சிரம் |
| சுவலம்புவம் | பாமேசிவரம் | காரணம் | இலலிதம் |
| கிரணம் | அஞ்சுமான் | ஆக்கினேயம் | சந்திரஞானம் |
| அஜிதம் | சித்தம் | வாதுளம் | |



இவ் ஆகமம் என்கிற வார்த்தை இறங்கி வருதல் என்னும் பொருளில் அமைகிறது. இப்பதமானது சிவனால் பார்வதிதேவிக்குச் சொல்லப்பட்டு விஷ்னுவினால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது என்பது ஐதிகம்.

இப் பதினெண் தத்துவங்களுமே சனாதன தர்மத்தின் அடிப்படையாகும்.

மேற்குறித்த பதின்னெண் தத்துவங்களைத் தவிர மூன்று நாஸ்திக தர்சனங்களும் 6 ஆஸ்திக தர்சனங்களும் சனாதன தர்மத்தில் அடங்கியுள்ள அவை

1) பௌத்த தர்சனம்
2) ஜன தர்சனம்
3) சசார்வாக தர்சனம் ஆகிய நாஸ்திய தர்ஷணங்களும்

**ஆஸ்திதர் சனங்கள் கீழ் வருமாறு**

| | | | |
|---|---|---|---|
| 1) | நியாய தர்ஷணம் | – | கௌதமமுனி |
| 2) | வைசிக தர்ஷணம் | – | கணாதரிஷி |
| 3) | சாங்கிய தர்ஷணம் | – | கபிலமுனி |
| 4) | யோக தர்ஷணம் | – | பதஞ்சலி மகரிஷி |
| 5) | மீமாம்ச தர்ஷணம் | – | ஜைமினி மகரிஷி |
| 6) | உத்தரமீமாம் சாகதர்ஷணம் (வேதாநதம்) | – | வியாச பகவான் |

அனைத்து விளக்கங்களும் ஒருசேரத் தொகுக்கப்பட்டு சனாதன தர்மத்தின் அனைத்து தத்துவங்களின் சாரமும் பொதிந்துள்ளதே வேதாந்தம் எனப்படுகின்ற வியாசபகவான் அருளிய உத்தரமிசம் ஆகும்.

வேதாந்தமானது மூன்று பிரஸ்தானங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

அவை 1) ஸ்ருதிபிரஸ்தான உபநிடதம்.
2) சூத்ரப் பிரஸ்தானம் அல்லது நியாயப் பிரஸ்தரமான ப்ரம்ம சூத்திரம்
3) ஸ்மிருதி பிரஸ்தானமான பகவத்கீதை.

இவ்வேதாந்த தரிசனம் குறித்து பல ஆச்சாரியர்கள் ஆராய்ச்சிகளை நிகழ்த்தியுளார்கள். அவையாவிலும் தலை சிறந்ததாகக் கருதப்படுவது ஆச்சாரியர் ஆதிசங்கரின் அத்துவைத கோட்பாடாகும்

இதில் பிரஸ்தான பாசியங்கள்
பிரகரன கிரந்தங்கள்
(வேதாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்கள்)
ஸ்தோத்திரங்கள்
(வழிபாட்டுமுறைகள் துதிகள் என்பன அடங்கும்.)

பகவான் வியாசரைப்போல ஆதி சங்கராச்சாரியாரும் 4 வேதங்களின் அடிப்படையில் 4 மடங்களைள் ஸ்தாபித்து 4 சிஸ்யர்களை அதற்குப் பொறுப்பாக்கினார். இந்நான்கிலும் நால்வகை குரபரம்பரை அமைப்பு உருவாகியது. அவையாவன

1) ஜகந்நாதபுரியில் – ஒரிசா மானிலத்தின் பத்மபாதமாக அமைந்துள்ள கோவர்த்தன மடம். இது ரிக்வேதத்தை அடிப்படையாய்க் கொண்டமைக்கப்பட்டது.

2) ஷிருங்கேரி கர்நாடக மானிலத்திலமைந்துள்ள சுரேஷ்வராச்சாரிகா – இது யஜுர் வேதத்தை அடிப்படையாகக் கொண்டமைக்கப்பட்டது. இது சாரதா மடம் எனப்படும்

3) துவாரகாவிலே குஜராத் மானிலத்திலே – ஹஸ்தாமலகாசாரியர் – இது சாமவேதத்தை அடிப்படையாகக் கொண்டமைந்த காலிகாமடம்.

4) ஹிமாலயத்தின் வழியில் காணப்படும் ஜோர்தத்தில் காணப்படும் ஜோஷி மடத்தில் அதர்வவேதத்தை அடிப்படையாக் கொண்ட தோடகாச்சாரிகள்.

இந்நான்கு மடங்களினூடும் சங்கராச்சியார் தசநாமி சம்பிரதாயங்களை உருவாக்கினார். தசநாமி என்பது பத்து வகையான சந்நியாசப் பட்டங்களாகும்.




| | | |
|---|---|---|
| 1) | வானம் | ரிக் வேதம் |
| 2) | ஆரண்யம் | |
| 3) | பாரதி | யஜுர் வேதம் |
| 4) | பூரி | |
| 5) | சரஸ்வதி | |
| 6) | தீர்த்த | ஸாம வேதம் |
| 7) | ஆஸ்ரம | |
| 8) | கிரி | அதர்வ வேதம் |
| 9) | பர்வத | |
| 10) | சாகரம் | |

இத்தனை சிறப்பும் பொருந்தியதால் வியாச பகவானை அடுத்து சிவனத அவதாரமாக்கருதப்பட்ட சங்கராச்சாரியார் "ஆதிசங்கரர் ஜகத்குரு" என்ற பட்டத்தையும் பெற்றார்.


**சுலோகம்**

*சங்கரம் சங்கராசார்யம்*
*கேஷவம் பாதராயணம்*
*சூஸ்த்ர பார்ஷ்ய க்ருதோ வந்தே*
*பகவந்தோ புனப்புனஹ*

*ஸதாசிவ சமாரம்பா*
*சங்கராச்சார்ய மத்யமா*
*ஹஸ்மத் ஆச்சாரிய பரியந்தாம்*
*வந்தே குரபரம்பரஹ*



| S.No | 1 சக்கரங்கள் | 2 ஸ்தானங்கள் | 3 பூதங்கள் | 4 தளங்கள் | 5 பீஜ மந்ரங்கள் | 6 உபசாரங்கள் | 7 தன்மாத்திரைகள் | 8 இநதிரியங்கள் | 9 தேவதைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆக்ரா | நெற்றித்தடம் | மனது | 2 | ஓம் | தீர்த்தம் | மஹத்து | சிந்தனை | சிவா |
| 2 | விழுத்தி | கழுத்து | ஆகாயம் | 16 | ஹம் | புஸ்பம் | சப்தம் | செவிகள் | சதாசிவா |
| 3 | அளாகதம் | இருதயம் | வாயு | 12 | யம் | துாபம் | ஸ்பர்சம் | தொக்கு (தோல்) | ஈசானா |
| 4 | மணிபூரகம் | நாபி | அக்னி | 10 | றம் | திபம் | ரூபம் | கண்கள் | விஷ்ணு |
| 5 | ஸ்வாதிஸ்டானம் | மர்மஸ்தானம் | ஜாப | 6 | வம் | நைவேத்தியம் | ரஸம் | நாக்கு | பிரம்மன் |
| 6 | மூலகாரம் | மூலாதாரம் | பூமி | 4 | லம் | சந்தனம் | கந்தம் | மூக்கு | கணபதி |



சனாதன தர்ம புவ விழிப்புணர்ச்சிக் கழகம்

கொழும்பு